2001 செப்டம்பர் 12]

5. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.

திரு. ம. அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, நான் தங்களிடம்...

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்திப் அவர்களே, அவர்கள் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) இல்லை, அவர்கள் பேசி முடித்துவிடட்டும், அடுத்து நீங்கள் சொல்லுங்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் ஒன்று முதல் மூன்று வரையிலான (பன்னிரெண்டாவது சட்டமன்றப் பேரவை) மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு குறித்து

திரு. ம. அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மிக முக்கியமான பிரச்சினைகளைக் குறித்து நான் ஏற்கெனவே 10 நாட்களுக்கு முன்பாக சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே இதுபற்றி என்னுடைய அறையிலேயும் சொன்னீர்கள்.

திரு. ம. அப்துல் லத்தீப்: சொன்னேன். ஆனால் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என் ஆய்வில் இருக்கிறது. மறுபடியும் பேசுவோம். (குறுக்கீடு) மறுபடியும் பேசலாம்.